# வெற்றிகரமான லாபம் தரும் வெள்ளரி !

## 10.02.2014

வேறு எந்தத் தொழிலிலுமே கிடைக்காத மனஅமைதி, விவசாயத்தில் கிடைக்கிறது' என்பதை உணர்ந்திருப்பதால், வயற்காட்டுப் பக்கம் கால் வைத்திராத பலரும், இன்று விவசாயத்தை நோக்கி ஓடிக் கொண்டுள்ளனர். குறிப்பாக, தொழிலதிபர்கள் பலரும் வழக்கமான தொழிலோடு விவசாயத்தையும் இணைத்து வெற்றி நடை போட்டு வருகிறார்கள். இந்த வரிசையில் இடம்பிடிக்கும் திருப்பூர், சேகாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சாமிநாதன், பழனிச்சாமி சகோதரர்கள், உள்ளாடைகள் உற்பத்தித் தெரிழிற்கூடத்தோடு… பசுமைக்குடில் விவசாயத்திலும் பட்டையைக் கிளப்பி வருகிறார்கள்! பரந்து விரிந்து கிடக்கும் பசுமைக்குடிலின் உள்ளே, மீன்வலை நெடும் பந்தல்களில்… பச்சைநிற மணிகளைப் போல் சரஞ்சரமாகத் தொங்கிக் கொண்டிருந்தன, வெள்ளரிப் பிஞ்சுகள். பந்தலின் வேர்ப்பகுதியில் அங்கும் இங்குமாய் சிரித்துக் கொண்டிருந்தன செண்டுமல்லிப் பூக்கள். இது, எங்க சொந்த ஊர். கிணற்று பாசனத்தில் ஏழு ஏக்கர் தோட்டமிருக்கு. தென்னை, புகையிலை, மக்காச்சோளம் என்று கிடைக்கும் தண்ணீரை வைத்து வெள்ளாமை செய்து கொண்டு வருகிறோம். எங்க பகுதியில் உள்ள விவசாயிகள் நிறைய பேர், விவசாயத்துடன் சேர்த்து விசைத்தறித் தொழிலையும் செய்துட்டு வர்றாங்க. நாங்களும் எங்க தோட்டத்தில் நாற்பது தறிகளைப் போட்டு 'பவர்லூம் ஃபேக்டரி' நடத்திக் கொண்டிருக்கிறோம். அருள்புரத்தில் சொந்தமான பனியன் ஏற்றுமதி நிறுவனமும் இருக்கு. இரண்டு பிசினஸிலும் நல்ல வருமானம் கிடைத்தாலும்.. 'குடும்பத் தொழிலான விவசாயத்தை விட்டுவிடக்கூடாது என்பது எங்க எண்ணம். அதே சமயத்தில், 'வழக்கமான விவசாயமாக இல்லாமல் புதுமையாக செய்யலாம் என்றுதான், பசுமைக்குடில் அமைத்தோம் என்று சொன்னார் சாமிநாதன்.

**25% மானியம் !**

" எங்களுக்கு இப்படியொரு யோசனை வந்ததற்கு காரணமே.. 'பசுமை விகடன்'தான். முதல் இதழிலிருந்து ஒரு இதழ் விடாமல் படித்துக் கொண்டிருக்கிறோம். 2010 ம் வருடத்தில், கோயம்புத்தூர், கொடீசியிவில் விவசாயக் கண்காட்சி நடப்பது பற்றி பசுமை விகடன் மூலமாக தெரிந்து கொண்டு, அங்கு சென்றோம். அப்போது தான் பசுமைக்குடில் பற்றித் தெரிந்துக் கொண்டோம். உடனடியாக. 'நிலத்தில் போர்வெல் போட்டு, பசுமைக்குடில் அமைக்கலாம் என்று முடிவு செய்தோம். தேசிய தோட்டக்கலை வாரிய அலுவலரிடம் பேசி, எனக்கு 4 ஆயிரம் சதுர மீட்டரில் (கிட்டத்தட்ட ஒரு ஏக்கர்) ஒரு பசுமைக்குடிலும், சகோதரர் பழனிச்சாமிக்கு அதே அளவு ஒரு பசுமைக்குடிலும் அமைத்தோம். இது இரண்டுக் சேர்த்து வங்கிக் கடன் வாங்கினோம். ஒரு பசுமைக்குடிலுக்கு 35 லட்ச ரூபாய் செலவு செய்தோம். அதில் 25% தொகை மானியம் கிடைத்தது. பசுமைக்குடில் அமைத்து, வெள்ளரி விவசாயம்தான் செய்து கொண்டிருக்கிறோம். 120 நாளில் வருமானம் கொடுக்கும் பயிர் என்பதால்தான் இதைத் தேர்ந்தெடுத்தோம். இதுவரைக்கும் மூன்று போகம் மகசூல் எடுத்துவிட்டோம் என்றார்.

**ஏக்கருக்கு 7 ஆயிரம் விதைகள் !**

பசுமைக்குடில் அமைக்கத் தேர்வு செய்த ஒரு ஏக்கர் நிலத்தில், 25 டிராக்டர் தொழுவுரத்தைக் கொட்டி , நன்றாக உழுது, நிலத்தைச் சமப்படுத்த வேண்டும். பிறகு, 184 அடி நீளம், ஒரு அடி உயரம், 3 அடி அகல்தில்

மேட்டுப்பாத்திகளை அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு பாத்திக்கும் அடுத்த பாத்திக்கும் இடையில் மூன்றடி இடைவெளி விட வேண்டும். ஒரு ஏக்கர் பசுமைக்குடிலில் 80 பாத்திகள் அமைக்கலாம். ஒரு ஏக்கருக்கு 7 ஆயிரம் விதைகள் தேவைப்படும். பாத்திகள் மீது 2 அடிக்கு ஒரு விதை என்ற கணக்கில் 'ஜிக் ஜாக்' முறையில் நடவு செய்ய வேண்டும். (பசுமைக்குடில் அமைத்துக் கொடுக்கும் நிறுவனத்தினரே, குடில், சொட்டுநீர், நுண் நீர்ப் பாசனக் குழாய் எல்லாம் பொருத்திக் கொடுத்து விடுவார்கள்).

**35-ம் அறுவடை !**

பிறகு, ஒரு டன் வண்டல் மண்ணைப் பொடியாக்கி, அதனுடன் 500 கிலோ தொழுவுரம், 5 கிலோ சூடோமோனஸ் ஆகியவற்றைக் கலந்து, பாத்திகளின் மீது தூவ வேண்டும். இப்படிச் செய்வதால், விதைகள் ஊக்கமுடனும், முளைப்புத்திறன் குறையாமலும் ஒரே சீராகவும் வளரும். பிறகு, மீன் வலை அல்லது நைலான் கயிறுகளால் பின்னப்பட்ட வலையை ஏழரை அடி உயரம், எண்பது அடி நீளத்திற்கு பாத்திகளில் நெடும்பந்தல் போல் அமைத்துக் கொள்ள வேண்டும். பத்து நாட்களுக்கு ஒரு முறை கொடியின் வேர்ப்பகுதியில் செழிம்பாக ஜீவாமிர்தக் கரைசலை ஊற்றி வர வேண்டும். நடவு செய்த 15-ம் நாளுக்குமேல் முளைத்து மேல் நோக்கி வரும் கொடிகளை, நெடும்பந்தலில் படர விட வேண்டும். 20-ம் நாள் கொடிகளில் பக்கக் கிளைகளை ஒடித்து கவாத்து செய்ய வேண்டும். 25-ம் நாளில் கொடிகளில் இளம் பிஞ்சுகளின் முனையில் பட்டுக் குஞ்சம் வைத்தது போல் பொன்னிறப் பூக்கள் பளபளக்கும். இந்தச் சமயத்தில், தழை, மணி, சாம்பல் சத்துக்கள் கொண்ட பயோ உரக்கலவைகள், நுண்ணூட்டச் சத்து உரங்கள் ஆகியவற்றை பரிந்துரைக்கும் அளவிற்கு கொடுக்க வேண்டும். இதனால், கொடிகளில் பூக்கள் உதிராமல் அனைத்திலுமே பிஞ்சுகள் பிடிக்கும். தொடர்ந்து, பயோ பாஸ்பரஸ், மற்றும் பொட்டாஷ் திரவ உரங்களையும் பரிந்துரைக்கும் அளவுக்குக் கொடுக்க வேண்டும். பசுமைக்குடிலை எப்போதும் மூடிய நிலையில் கவனமாகப் பராமரித்தால் பூச்சிகள் தாக்காது. ஆனால், செடிகளின் வேர்ப்பகுதியில் நூற்புழுக்கள் தாக்க வாய்ப்புள்ளது. பாத்திகளில் பரவலாக செண்டுமல்லிச் செடிகளை நடுவதன் மூலம் இவற்றைத் தடுக்கலாம். வேறு பூச்சிகள் தாக்கினால், தேவையான அளவில் மூலிகைப் பூச்சிவிரட்டியைப் பயன்படுத்தலாம். 35-ம் நாளில் பிஞ்சுகள் முற்றி, அறுவடைக்குத் தயாராகி விடும். பசுமைக்குடிலில் வெள்ளரியின் மொத்த சாகுபடிக் காலம் 120 நாட்கள். விதைத்த 35 –ம் நாளிலிருந்து தொடர்ந்து 85 நாட்கள் மகசூல் எடுக்கலாம். ஒரு ஏக்கர் நிலத்தில் இருந்து 50 டன் வரை மகசூல் எடுக்கலாம்.

**ஒரு போகத்திற்க்கு 35 டன்!**

ஒரு போகத்தில் 35 டன்னுக்குக் குறையாமல் மகசூல் கிடைக்கும். அதிகபட்சமாக 50 டன் கிடைக்கும். ஒரு கிலோ வெள்ளரிப்பிஞ்சு 20 ரூபாய் என்று விலை போகிறது. நாங்க, வெள்ளரிப்பிஞ்சுகளை அட்டைப்பெட்டிகளில் அடைத்து, கேரளாவிற்கு அனுப்புகிறோம். அங்கு இருந்து அரபு நாடுகளுக்குப் போகிறது. ஏக்கருக்கு ஒரு போகத்தில் 35 டன் மகசூல் என்றே வைத்துக் கொண்டாலும்….. ஏக்கருக்கு 7 லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கும். செலவு போக கிட்டத்தட்ட நான்கு லட்ச ரூபாய்க்கு குறையாமல் லாபம் கிடைக்கும் என்றார்.

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| தொழுவுரம் | 50,000 | |
| உழவு | 6,000 | |
| பாத்தி | 10,000 | |
| விதை, நடவு | 67,100 | |
| வண்டல் மண் | 10,000 | |
| திரவ, நுண்ணுயிர் உரங்கள் | 50,000 | |
| பறிப்பு | 30,000 | |
| வெள்ளரி மூலம் வரவு 35 டன் | | 7,00,000 |
| மொத்தம் | 2,23,100 | 7,00,000 |
| நிகரலாபம் | | 4,76,900 |
| குறிப்பு : பசுமைக்குடில் மற்றும் சொட்டுநீர் அமைப்புகள் நிரந்தரச் செலவுகள் என்பதால், அவற்றைக் கணக்கில் சேர்க்கவில்லை | | |


**தொடர்புக்கு**

கே.சாமிநாதன், செல்போன் : 98422 57548

கே.பழனிச்சாமி, செல்போன் : 93449 86813



**ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 10.02.14 www.vikatan.com**